This Question Paper consists of 31 questions 8 printed pages.
8 பக்கங்களைக் கொண்ட இவ்வினாத்தாளில் 31 வினாக்கள் உள்ளன.

Roll No.
பதிவு எண்: | | | | | | | | | | | | |

**Code No.**
குறியீடு எண்: **63/S/A/TM**

**Set / செட்** A

# TAMIL
# (தமிழ்)
# (237)

Day and Date of Examination ..........................................................................
(தேர்வு நடைபெறும் நாள் மற்றும் தேதி):

Signature of Invigilators 1. ..........................................................................
(தேர்வு மேற்பார்வையாளர்
கையொப்பங்கள்) : 2. ..........................................................................

**பொதுக்குறிப்புகள் :**

1. தேர்வு எழுதுவோர் தங்களின் வரிசை எண்ணை வினாத்தாளின் முன்பக்கம் எழுத வேண்டும்.
2. வினாத்தாளில் கொடுக்கப்பட்டுள்ள வினாக்களின் எண்ணிக்கையும் வினாத்தாளின் முன்பக்கம் அச்சாகியுள்ள வினாக்களின் எண்ணிக்கையும் மொத்த பக்கங்களின் எண்ணிக்கையும் சரியாக உள்ளனவா என்பதையும் அனைத்து வினாக்களும் வரிசையாக உள்ளனவா என்பதையும் சரிபார்க்கவும்.
3. பொருத்தமான விடையைத் தேர்ந்தெடுத்து விடையளிக்கும் போது கொடுக்கப்பட்டுள்ள நான்கு விடைகளுள் (அ, ஆ, இ, ஈ) ஏதேனும் ஒன்றைத் தேர்ந்தெடுத்து விடைத்தாளில் எழுத வேண்டும்.
4. பொருத்தமான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதும் வினாக்கள் உட்பட அனைத்து வினாக்களுக்கும் குறிப்பிட்ட நேரத்திற்குள் எழுதி முடிக்கப்பட வேண்டும். பொருத்தமான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதும் வினாக்களுக்காகத் தனியாக நேரம் எதுவும் கொடுக்கப்படமாட்டாது.
5. வினாத்தாளில் ஏதேனும் அடையாளக் குறிகள் இட்டாலோ அல்லது தேர்வு எழுதுபவர் தனது எண்ணை அதற்கென ஒதுக்கப்படாத இடத்தில் எழுதினாலோ தேர்வு எழுதுபவர் தேர்வு எழுதும் தகுதியை இழக்க நேரிடும்.
6. உங்களது வினாத்தாளின் எண்ணை குறியீடு எண்: 63/S/A/TM செட் A விடைத்தாளில் எழுதுங்கள்.



Unnati Educations
9899436384, 9654279279

# TAMIL
# (தமிழ்)
# (210)

கால அளவு : 3 மணி நேரம் ] [ மொத்த மதிப்பெண்கள் : 100

**குறிப்பு:** 1. அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்க.

2. விடைகளுக்குரிய சரியான வினா எண்களை எழுதவும்.

பொருத்தமான விடையை எடுத்து எழுதுக : 1×11=11

**1.** கங்கை நதிக்கரையில் மிகுதியாக விளையும் பயிர்

(அ) கோதுமை

(ஆ) நெல்

(இ) சோளம்

(ஈ) வரகு

**2.** தேவர் உலகம் வரை மணம் பரப்பும்

(அ) குறிஞ்சி மலர்

(ஆ) செண்பக மலர்

(இ) மல்லிகை மலர்

(ஈ) முல்லை மலர்

**3.** இழந்த அரசாட்சியை இந்திரனுக்கு மீட்டுத் தந்தவன் யார்?

(அ) இராமன்

(ஆ) விசுவாமித்திரர்

(இ) தசரதன்

(ஈ) இலக்குவன்

**4.** அரவம் என்ற சொல்லின் பொருள்-

(அ) பருவம்

(ஆ) பாம்பு

(இ) கலை

(ஈ) பறவை



Unnati Educations
9899436384, 9654279279

5. ______ எழுத்தும் வாழும் மக்களுக்கு கண் ஆகும்.

(அ) எண்ணும்

(ஆ) மொழியும்

(இ) உயிரும்

(ஈ) மூச்சும்

6. சிலுவையில் அறையப்பட்ட ஆணி என வைரமுத்து எதனைக் குறிப்பிடுகின்றார்?

(அ) மதம்

(ஆ) ஜாதி

(இ) கடவுள்

(ஈ) மொழி

7. கலாம் கவனித்த குடும்பங்களில் மூன்று குழந்தைகளையும் படிக்க வைக்க முடியாதவர் யார்?

(அ) வெங்கட்

(ஆ) குப்புசாமி

(இ) இராஜன்

(ஈ) கருப்பன்

8. முதல் மின்னணுவியல் கணினி வடிவமைக்கப்பட்ட ஆண்டு

(ஆ) 1926

(ஈ) 1964

(இ) 1946

(ஈ) 1966

9. காந்தி தென்னாப்பிரிக்காவுக்கு எந்த ஆண்டு சென்றார்?

(ஆ) 1938

(ஈ) 1893

(இ) 1898

(ஈ) 1895



Unnati Educations
9899436384, 9654279279

**10.** வினைச்சொல்

(அ) நடத்தல் (ஆ) படித்தல்

(இ) வந்தான் (ஈ) முருகன்

**11.** படர்க்கை பன்மை

(அ) நான் (ஆ) நாங்கள்

(இ) நீங்கள் (ஈ) அவர்கள்

**12.** கீழ்க்காணும் பத்தியைப் படித்து அதனைத் தொடர்ந்து வரும் வினாக்களுக்கு விடையளிக்கவும் :

பொருள்களை அவை காணப்படும் உருவ நிலைக்கு ஏற்பத் திண்பொருள், நீர்ப்பொருள், ஆவிப் பொருள் என்று பிரித்துப் பேசுகின்றோம். திண்பொருளுக்கும் ஆவிப் பொருளுக்கும் இல்லாத சில சிறப்பு இயல்புகள் நீர்ப்பொருளுக்கு இருப்பதை இன்றைய அறிவியல் நமக்கு அறிவுறுத்துகின்றது. பொதுவாகத் திடப்பொருளையும் ஆவிப் பொருளையும் அழுத்தினால் அளவில் சுருங்கும்படி செய்யலாம். அரிசி, உமி, தவிடு போன்ற பொருள்களை அழுத்த அளந்து ஒரு படியை முக்காற் படியாக காட்டலாம். அதே போன்று ஒரு உதை பந்தில் இயல்பாக அது கொள்வதைப் போன்று மூன்று மடங்கு அளவிற்கு வேண்டுமானாலும் காற்றினை அடைத்து வைக்கலாம். ஆனால் எவ்வளவுதான் அழுத்தி அளந்தாலும் ஒரு படி பாலையோ எண்ணெயையோ அல்லது நீரையோ குறைத்து அளந்து காட்ட முடியாது. இதிலிருந்து அழுத்தத்தினால் நீர்ப்பொருள் சுருங்குவதில்லை என்பது விளங்குகிறது. இவ்வியல்பை நீர்ப்பொருளின் சுருங்கா இயல்பு என்று ஆறிவியல் குறிப்பிடுகின்றது. இவ்வுண்மையைக் கண்டுபிடித்தவர் கி.பி. 17ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த பாஸ்கல் என்று சொல்வர்.

**வினாக்கள் :**

1. பொருள்களை எவ்வாறு பிரிக்கலாம்? 3
2. அறிவியல் எதை அறிவுறுத்துகின்றது? 2
3. நீர்ப்பொருளின் சுருங்கா இயல்பு என்று அறிவியல் குறிப்பிடுவது யாது? 3
4. நீர்ப்பொருளின் சுருங்கா இயல்பை கண்டுபிடித்தவர் யார்? எந்த ஆண்டு கண்டுபிடித்தார்? 3



**Unnati Educations**

**9899436384, 9654279279**

**13.** பாடல் வரிகளைப் படித்து அதனைத் தொடர்ந்து வரும் வினாக்களுக்கு விடையளிக்க :

தமிழனுக்கு வீழ்ச்சியில்லை, தமிழன் கீர்த்தி
தாழ்வதில்லை தமிழ்நாடு தமிழ்மக்கள்
தமிழ் என்னும் பேருணர்ச்சி இந்நாள் போலே
தமிழ்நாட்டில் எந்நாளும் இருந்ததில்லை
தமிழர்க்குத் தொண்டு செய்யும் தமிழனுக்குத்
தடை செய்யும் நெடுங்குன்றும் தூளாய்ப் போகும்
தமிழ்த் தொண்டன் பாரதிதான் செத்த துண்டோ?

**வினாக்கள் :**

1. பாரதிதாசன் பேருணர்ச்சி என்று எவ்வெவற்றைக் கூறுகிறார்? 2
2. பாரதிதாசன் எக்குன்று தூளாய்ப் போகும் என்று கூறுகிறார்? 2
3. தமிழுக்குத் தொண்டு செய்வோரின் உயர்வினைக் கூறுக. 1
4. பாரதிதாசன் கூறும் தமிழ்த் தொண்டன் யார்? 1

**14.** இராம இலக்குவர்கள் விசுவாமித்திர முனிவரைப் பின் தொடர்ந்ததைக் கம்பர் எவ்வாறு கூறுகின்றார்? 1

**15.** காகம் அணுகா மலை எது? 1

**16.** நாவல் என்றால் என்ன? 1

**17.** அன்னையின் கருத்தாக மு.வ. தெரிவிக்கும் செய்தி யாது? 1

**18.** தமிழில் மொழி பெயர்க்க : 2

(அ) Capacitor

(ஆ) Internet

**19.** அ. சேர்த்து எழுதுக : 4×½=2

*(i)* ஓர்+இடத்து

*(ii)* பெருமை+செவ்வம்

*(iii)* கற்று+அறிந்தார்

*(iv)* சாம்+துணையும்



Unnati Educations
9899436384, 9654279279

ஆ. கீழ்க்காணும் விகுதிகளைக் கொண்டு ஒவ்வொன்றுக்கும் இரண்டு இரண்டு சொற்களை எழுதுக : 2

1. மை
2. அல்

இ. கீழ்க்கண்ட தொடர்களில் விடுபட்ட இடத்தை எதிர்மறைச் சொற்களைக் கொண்டு நிரப்புக : 2

1. ஏழையின் தவிப்பை _______ அறியமாட்டான்.
2. நல்லவர்கள் மக்கள் அன்பைப் பெறுவர். _______ மக்கள் வெறுப்பைப் பெறுவர்.

ஈ. கீழே தரப்பட்டுள்ள சொற்களுக்கு அதே பொருள் தரும் வேறு சொற்களை எழுதுக : 2

1. செல்இனம்
2. முழை
3. கனகம்
4. எல்

**20.** பின்வரும் மரபுத் தொடர்களைப் பயன்படுத்தி வாக்கியம் அமைக்க : 2

1. தட்டிக் கொடுத்தல்
2. வெட்ட வெளிச்சம்

**21.** குழுக்களுக்கு கடனுதவி வழங்குபவை எவை? 1

**22.** 'பெண்கல்வியின் தேவை' என்ற தலைப்பில் குறிப்புரை ஒன்று எழுதுக. 4

**23.** தசரதனின் தயக்கம் விசுவாமித்திரரின் கோபம் ஆகியவை பற்றி எழுதுக. 5

**24.** 'சித்த மருத்துவத்தின் தேவை' குறித்த அறிவிப்பினை எழுதுக. 5

அல்லது

கொரோனா தடுப்பு முன்னெச்சரிக்கை நடவடிக்கை குறித்து அரசு தரும் விளம்பர அறிவிப்பினை எழுதுக.

**25.** அ. வலி-வளி இவற்றுக்கான பொருள் வேறுபாடு கூறி வாக்கியத்தில் அமைத்து எழுதுக. 2

ஆ. அகவுதல் - கூவுதல் இவை எப் பறவைகளுக்குரிய ஒலிகளாகும்? 2



Unnati Educations
9899436384, 9654279279

**26.** 24 வாஞ்சிநாதன் தெரு, அம்பத்தூர், சென்னையில் இருக்கும் நீ வள்ளியூர், 35 தெற்கு மாட வீதியில் வசிக்கும் உன் சகோதரனுக்கு இரண்டாயிரம் ரூபாய் அனுப்புவதாகக் கொண்டு கீழே தரப்பட்டுள்ள பண அஞ்சல் படிவத்தைப் பூர்த்தி செய்க. (உமது பெயர் கண்ணன்/கோதை என்று கொள்க. சகோதரியின் பெயர் கனகா எனக் கொள்க) 5

இந்தியா பண அஞ்சல் படிவம்

தகவலுக்கான இடம்

1. .............................................................................................

.............................................................................................

.............................................................................................

| பண அஞ்சல் எண் : 7 | பெறுநர் : |
|---|---|
| 2. ................................ | 3. ................................ |
| ................................ | ................................ |
| ................வழங்கவும். | ................................ |

அனுப்புநர்

கையொப்பம் ...................

................ இக்கோட்டிற்குக் கீழ் எழுதுதல் கூடாது.......................

............................ இரண்டாவது படிப்பு ..................................

.............................................................................................

---

4. பெற்றுக் கொண்டேன்.....................................................................

.................................................................

பெற்றுக் கொண்டவர் கையொப்பம் .........................................

.............................................................................................

5. அனுப்புபவர் பெயர் மற்றும் முகவரி: .......................................

.................................................................

.................................................................

அல்லது

நடக்கவிருக்கும் குழந்தைகள் தின விழா பற்றி உனது பள்ளி தகவல் பலகையில் இடம்பெற வேண்டிய தகவல்கள் குறித்து ஓர் அட்டவணை தயாரிக்க. 5



Unnati Educations
9899436384, 9654279279

**27.** கணினியின் சிறப்பியல்புகளைத் தெளிவாக விளக்கவும். 5

அல்லது

வெள்ளைச்சாமி, அஞ்சம்மாவின் காதலை விளக்குக.

**28.** பிழை திருத்தம் செய்க : 5

1. ஏலையின் சிறிப்பில் அரைவனைக் கானலாம்.
2. கர்க கசடர
3. சிற்பி சிளையை செதுக்கினான்.
4. புலி கத்தியது.
5. இராமண் விள்ளை உடைத்தாண்.

**29.** நீ கண்டு களித்த புத்தகக் கண்காட்சி பற்றி உன் நண்பனுக்குச் சுவையான கடிதம் ஒன்று எழுதுக. 7

அல்லது

நீவிர் வாழும் பகுதியில் பொதுநூலக வசதி வேண்டி ஊராட்சி ஒன்றியத் தலைவருக்குக் கடிதம் எழுதுக.

**30.** ஏதேனும் ஒரு தலைப்பு பற்றி நூறு சொற்களுக்குக் குறையாமல் சிறு கட்டுரை எழுதுக : 5

(அ) கூடி வாழ்ந்தால் கோடி நன்மை

(ஆ) மாணவர் கடமை

(இ) உணவே மருந்து

**31.** ஏதேனும் ஒரு தலைப்பு குறித்து இருநூறு சொற்களுக்குக் குறையாமல் கட்டுரை எழுதுக : 10

(அ) நான் விரும்பும் நூல்

(ஆ) செய்தித்தாளின் பயன்கள்

(இ) தொலை தொடர்பு சாதனங்களும் கல்வியும்

★ ★ ★



Unnati Educations
9899436384, 9654279279